பக்கங்கள் 15

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆவணி 19 செவ்வாய்க்கிழமை 05.09.2023 அதிர்வு 36

## கொலைக்குற்றவாளிகள் மூவர் வசமாகச் சிக்கினர்

போதைப்பொருள் கடத்தல் மற்றும் கொலைக் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவர்கள் என்று கூறப்படும் அத்துருகிரிய ஜெரோம் உள்ளிட்ட 3 பேர் வெலிக்கடைப் பொலிஸாரால்

04

# ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற சொந்த மக்களையே கொன்றனர்

### ‘சனல்-4’ முன்னோட்டக் காணொலியில் அதிர்ச்சித் தகவல்



2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பிலான பல அதிர்ச்சித் தகவல்களை பிரித்தானியாவின் சனல்-4 இல் இன்று வெளியாகியுள்ள முன்னோட்ட காணொலியில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளராக இருந்த ஆசாத் மௌலானா குறிப்பிடுகின்றார்.

04



### ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான

# ‘சனல்-4’ காணொலி பற்றி சர்வதேச மட்ட விசாரணை!

### கோட்டாவுக்கு வாக்களிக்குமாறு பேராயரும் கேட்டுக்கொண்டார் என அரசு சுட்டிக்காட்டு



“உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் தொடர்பான சனல் - 4 காணொலி தொடர்பில் சர்வதேச மட்டத்தில் விசாரணைகளை மேற்கொள்ள அவதானம் செலுத்தியுள்ளோம்.”

- இவ்வாறு அமைச்சர் மனுஷ நாணயக்கார நாடாளுமன்றத்தில் இன்று அறிவித்தார்.

04




## சீரற்ற காலநிலையால் 6 ஆயிரம் பேர் பாதிப்பு

இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலையால் ஒன்பது மாவட்டங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 49 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தால் இன்று காலை வெளியிடப்பட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, களுத்துறை, கொழும்பு, இரத்தினபுரி,

04

## 7 பேருக்கு உயிர் கொடுத்த மாணவி உயர்தரப் பரீட்சையில் 3 'ஏ' சித்தி!



மூளைச்சாவடைந்ததால் தனது உடல் உறுப்புகளை வழங்கி ஏழு பேருக்கு உயிர் கொடுத்து இவ்வுலகைவிட்டுச் சென்ற 19 வயது மாணவியான விஹகனா ஆரியசிங்க, ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுள்ளார்.

04

## சுமந்திரன் ஜெனிவா பயணம்



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் இன்று ஜெனிவாவுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

வழமை போல ஐ. நா. மனித உரிமை பேரவைக் கூட்டத் தொடருக்கு முன்னதாக நடைபெறும் நாடுகளுடனான சந்திப்பில் கலந்து கொள்வதற்காக இன்று அவர் ஜெனிவா புறப்பட்டார்.

04



## செல்வம், சார்ள்ஸ், சிவாஜிக்கு யாழ். நீதிமன்றம் பிடியாணை!

நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன் மற்றும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவாஜிலிங்கம்

04



# வலி வடக்கில் 49 குடும்பங்களுக்கு இன்று காணிகள் பகிர்ந்தளிப்பு

## அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

வலி வடக்கு அன்ரனிபுரத்தில் அண்மையில் விடுவிக்கப்பட்ட அரச காணிகள் பொது மக்களுக்கு இன்று பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக நீண்ட காலமாக அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்ற – வலி. வடக்கைப் பூர்வீகமாகக் கொண்ட – 49 குடும்பங்களுக்கு தலா ஒன்றரைப் பரப்பு வீதம் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இந்தப் பிரதேசம் உயர் பாதுகாப்பு பிரதேசமாக இருந்து வந்த நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் கடந்த பெப்ரவரி மாதமளவில் அது விடுவிக்கப்பட்டிருத்தது. விடுவிக்கப்பட்ட அரச காணிகளை முகாம்களில் வாழும் மக்களுக்கு பகிர்ந் தளிப்பதற்கான நடவடிக்கைகளும் அமைச்சரினால் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குலுக்கல் முறையில் காணிகளை தெரிவு செய்து பயனாளர்களுக்கு வழங்கி வைத்த இன்றைய நிகழ்வில் வலி வடக்கு பிரதேச செயலாளர் திரு. சிவஸ்ரீ, யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரின் இணைப்பாளர் செல்வி. சாந்தாதேவி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் சிவகுரு பாலகிருஷ்ணன்(தோழர் ஜீவன்) மற்றும் கட்சியின் பிரதேச அமைப்பாளர் கள், அரச அதிகாரிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# துப்பாக்கியை வழங்காது ‘லீவில்’ சென்ற இராணுவச் சிப்பாய் மடக்கிப் பிடிப்பு

## விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிமன்றம் உத்தரவு

(என்.புவியரசன்)

பளை இராணுவ முகாமிலிருந்து இரகசியமாக துப்பாக்கியை எடுத்துச் சென்ற நிலையில் கைதுசெய்யப்பட்ட குருநாகல் பகுதியை சேர்ந்த 26 வயதான இராணுவச் சிப்பாயை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது–

பளை இராணுவ முகாமிலிருந்து இரகசியமாக துப்பாக்கியை எடுத்துச் சென்ற குருநாகல் பகுதியை சேர்ந்த 26 வயதான இராணுவச் சிப்பாய் ஒருவர் மாங்குளத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

பளையிலுள்ள கவசப்படை பிரிவை சேர்ந்த இராணுவச்சிப்பாய் நேற்று விடுமுறையில் வீடு சென்ற போது, அவரது கடமைத் துப்பாக்கியை அவர் ஒப்படைக்கவில்லை.

இது குறித்து ஆய்வு செய்த இராணுவத்தினர், சிப்பாய் துப்பாக்கியுடன் வெளியேறியிருக்கலாம் என சந்தேகித்து உடனடியாக பளை ரயில் நிலையத்துக்குச் சென்ற போது, சிப்பாய் அங்கிருக்கவில்லை.

குறித்த சிப்பாய் பளையில் இருந்து ரயிலில் ஏறினால் சிக்கிக் கொள்ள நேரிடும் என்பதால், கொடிகாமத்துக்குச் சென்று ரயிலில் ஏறியுள்ளார்.

பளை இராணுவத்தினர் கொடிகாமத்துக்கு தேடி சென்ற போது, கொடிகாமத்திலிருந்து ரயில் புறப்பட்டிருந்தது. இதையடுத்து, பளை ரயில் நிலையத்திலிருந்து சிவில் உடையில் இராணுவ அணி ரயிலில் ஏறியது.

அவர்கள் ரயிலில் தேடுதல் மேற்கொண்டனர். இந்த நிலையில் கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் ரயில் பயணித்துக் கொண்டிருந்தபோது, இராணுவச் சிப்பாயை அவர்கள் அடையாளம் கண்டனர்.

இதையடுத்து, இராணுவத்தினருக்கு அறிவிக்கப்பட்டு, மாங்குளம் ரயில் நிலையத்தில் வைத்து, சிப்பாய் ரயிலில் இருந்து இறக்கிக் கைது செய்யப்பட்டார்.

இதன்போது ரி–56 ரக துப்பாக்கி அவரது பயணப் பையிலிருந்து மீட்கப்பட்டது. 4 மகசீன்களும் மீட்கப்பட்டன.

மாங்குளம் ரயில் நிலையத்தில் வைத்து, இராணுவப் பொலிஸார் அவரிடம் நடத்திய முதற்கட்ட விசாரணையில், குடும்பத் தகராறின் எதிரொலியாக துப்பாக்கியை கொண்டு சென்றார் என்று தெரிவித்துள்ளார்.

இராணுவச் சிப்பாயின் மனைவி, தற்போது அவரை விட்டு பிரிந்து சென்று, வேறொரு நபருடன் வாழ்ந்து வருகிறார்.

அந்த நபர் தன்னைத் தொடர்ந்து, மிரட்டி வருகிறார் என்றும் இதனால் பழிவாங்குவதற்காக துப்பாக்கியை எடுத்துச் சென்றார் என்றும் அந்தச் சிப்பாய் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக சந்தேகநபர் நேற்றுக் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபொழுது சந்தேகநபரை எதிர்வரும் 13 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# தற்கொலைகளைத் தடுக்க வேண்டிய பொறுப்பை ஊடகங்கள் ஏற்க வேண்டும்

## சமூக சேவகர் பரமானந்தம் கோரிக்கை

(த.சுபேசன்)

மாணவர்களுடைய தற்கொலைகளை தடுக்க வேண்டிய பொறுப்பை ஊடகங்கள் ஏற்க வேண்டும் என்று சமூக சேவகரும், ஓய்வுநிலை ஆசிரியரும், கொடிகாமம் நட்சத்திர மஹால் உரிமையாளருமான த.பரமானந்தம் கோரிக்கை விடுத்துள்ளார்.



கடந்த வெள்ளிக்கிழமை கொடிகாமத்தில் இடம்பெற்ற "மூச்சு" குறுந் திரைப்பட ஆரம்ப நிகழ்வில் விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்–

அண்மைக்காலமாக பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் தற்கொலை செய்து கொள்ளும் நிலை அதிகரித்துக் காணப்படுகின்றது.

தற்கொலை எண்ணத்தில் இருந்து விடுபடுவது எப்படி என்று பாடசாலைகளிலும் கற்பிக்க மாட்டார்கள். பல்கலைக்கழகங்களிலும் கற்பிக்க மாட்டார்கள். தற்கொலை எண்ணத்தில் இருந்து மாணவர்களை காப்பாற்ற வேண்டும்.

பாடசாலைகளுக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் அப்பால் ஊடகங்கள்தான் இவ்வாறான மாணவர்களின் மன நிலையை மாற்ற வேண்டும்.

இன்று தானும் தன் குடும்பமும் என வாழ்பவர்களே அதிகம். சமூக அக்கறையோடு செயற்படுபவர்கள் மிகக் குறைவு.

குறுந் திரைப்படங்கள் மாணவர்களின் மனங்களில் மாற்றத்தை ஏற்படுத்தவல்லன. எனவே குறுந்திரைப் படங்கள் உள்ளிட்ட ஊடகங்களில் நல்ல பல செய்திகளை விதைத்து மாணவர்களுடைய மனங்களில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

இந்திய குறுந்திரைப்படங்கள் சிலவற்றை எடுத்துக் கொண்டால் அவை ஒரு குடும்பத்தை எப்படி சீரழிப்பது, சூது செய்வது எப்படி என பல தீய எண்ணங்களை விதைக்கின்றன. அதைப் பார்ப்பவர்கள் மனங்களும் காலப்போக்கில் அவ்வாறு மாறிவிடும். இந்தியாவில் சீர்கேடுகள் இடம்பெற இவ்வாறான குறுந்திரைப்படங்களும் ஒரு காரணமாக அமையக்கூடும்.

குறுந்திரைப்படம், திரைப்படம் ஊடாக மக்களுக்கு நல்ல செய்திகளை கொடுக்க வேண்டும். கலைஞானி குமரநாதனது "மூச்சு" குறுந்திரைப்படமும் கல்விக்கு வறுமை தடை இல்லை என்ற நல்ல செய்தியை சமூகத்துக்குக் கொடுக்கவுள்ளது. சீரழிந்து செல்லும் எமது சமூகத்துக்கு நல்ல செய்திகளைக் கொடுத்து சமூகத்தை மீட்டெடுக்க வேண்டும். இன்று போதைவஸ்து பாவனை உக்கிரமடைந்துள்ளது. மாணவர்களது நடத்தையிலும் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கி விட்டது.

பாடசாலைக்கு போதையில் வரும் மாணவனை கண்டும் காணாமலும் விடுகின்ற ஆசிரியர்கள் எம் சமூகத்தில் உள்ளனர். பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வு மிக அவசியம். அந்த விழிப்புணர்வை ஊடகங்கள் வாயிலாக ஏற்படுத்தி மாணவர்களை சீர்திருத்த முடியும்.

இன்று மாணவர்களிடம் குடிகொண்டுள்ள உற்சாகம் அற்ற தன்மை தொடர்பில் சமூகம் கவனம் செலுத்த வேண்டும். இந்த நிலைமை தொடர்ந்தால் ஆரோக்கியமான எதிர்கால சந்ததியை கட்டியெழுப்ப முடியாது. எமது எதிர்கால சந்ததியினரின் மனங்களில் மாற்றத்தை ஏற்படுத்தி அவர்களைச் சமூகத்தில் தலைசிறந்த மனிதர்களாக மிளிரச் செய்ய வேண்டிய பொறுப்பு சகலருக்கும் உள்ளது.– என்றார்.

# மாடு மேய்க்கச் சென்றவர் சடலமாக மீட்கப்பட்டார்!

## மட்டு. ஓமனியாமடுவில் சம்பவம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள ஓமனியாமடு பிரதேசத்தில் மாட்டுப்பட்டிப் பகுதியில் மாடு மேய்க்கச் சென்ற ஆண் ஒருவர் இன்று செவ்வாய்க்கிழமை உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை, கிண்ணியடி விஷ்ணுகோவில் வீதியைச் சேர்ந்த 49 வயதுடைய கந்தையா மாமாங்கம் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஓமனியாமடுப் பகுதியிலுள்ள அமைக்கப்பட்டிருக்கும் மாட்டுப்பட்டிக்கு மாடுகளை மேய்ப்பதற்காக இந்த நபர் வழமைபோல நேற்று வீட்டில் இருந்து சென்றிருந்தார். இன்று காலையாகியும் அவர் வீடு திரும்பாதமையையடுத்து மாட்டுப்பட்டியின் உரிமையாளர் அந்தப் பகுதிக்குச் சென்று அவரைத் தேடிய போது மாட்டுப்பட்டிக்கு அருகிலுள்ள பகுதியில் உயிரிழந்த நிலையில் அவர் சடலமாக கிடக்கின்றமையைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு பொலிஸார் மற்றும் தடயவியல் பிரிவு பொலிஸார் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக நீதிமன்ற உத்தரவைப் பெற்று வைத்தியசாலையில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கையை தாங்கள் மேற்கொண்டு வருகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## ‘சனல்-4’ காணொலி...

“கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது கோட்டபய ராஜபக்ஷவுக்கு வாக்களியுங்கள் எனப் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை வேண்டுகோள் விடுத்திருந்தார். அதேபோல் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சம்பவத்தைக் கண்ணீருடன் குறிப்பிட்ட ஒரு தரப்பினர் கோட்டபய ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரத்துக்கு உடந்தையாக இருந்தார்கள்” – என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற்ற அமர்வின்போது வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையின் போது ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி –

“ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான சனல் – 4 காணொலி மற்றும் அதன் உள்ளடக்கம் பாரதூரமானது. நாட்டு மக்களைக் கொன்று இரத்தத்தின் ஊடாக ஒரு தரப்பினர் ஆட்சியைக் கைப்பற்றியிருந்தால் அது குறித்து முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இந்த விடயம் தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்ன?” – என்று கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் மனுஷ நாணயக்கார –

“ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான சனல் – 4 காணொலி தொடர்பில் ஜனாதிபதி தலைமையில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விசேட கவனம் செலுத்தினோம்.

இந்த விடயம் தொடர்பில் எதிர்வரும் நாள்களில் நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வை குழு ஊடாக விசாரணைகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம்.

அத்துடன் தேவையாயின் சர்வதேச மட்டத்தில் விசாரணைகளை மேற்கொள்ளவும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் விவகாரம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதில் அரசு ஒருபோதும் பின்வாங்காது.

ஜெனிவாக் கூட்டத் தொடர் நடைபெறவுள்ள நிலையில்தான் இவ்வாறான காணொலிகள் வெளியாகுகின்றன.

கோட்டபய ராஜபக்ஷவின் தேர்தல் வெற்றிக்காகக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

அவ்வாறாயின் அதிகாலையில் சென்று கோட்டபய ராஜபக்ஷவுக்கு வாக்களியுங்கள் எனப் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அப்போது வேண்டுகோள் விடுத்திருந்தார்.

மறுபுறம் ஒரு தரப்பினர் அழுது கொண்டு ஒரு தரப்புக்குச் சார்பாகச் செயற்பட்டார்கள். ஆகவே, இவர்கள் அனைவரும் கோட்டபய ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரத்துக்கு உடந்தையாகச் செயற்பட்டவர்களாகக் கருத வேண்டும்.” – என்று தெரிவித்தார்.

## ஆட்சியதிகாரத்தை...

உயிர்த்த ஞாயிறு தினத் தற்கொலைத் தாக்குதலில் சாதாரண பொதுமக்களே ஆலயங்களிலும் ஹோட்டல்களிலும் கொன்று குவிக்கப்பட்டனர். இவர்கள் கொல்லப்பட்டமை ஆட்சியை கைப்பற்றுவதற்காகவா என்று கேள்வி எழுப்புகிறார் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளராக இருந்த ஆஸாத் மௌலானா.

மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அரசியலில் மிகவும் விசுவாசமாக செயற்பட்ட பிள்ளையான் எனப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தனுடன் ஆசாத் மௌலானா அரசியலில் ஈடுபட்டுவந்தவர்.

“என்னிடம் ஆபத்தான கைதிகள் உள்ளனர். அவர்கள் கடும்போக்கானவர்கள். அவர்களில் ஒருவரை சந்திக்குமாறு (சிறையில் இருந்து) பிள்ளையான் என்னிடம் தெரிவித்தார்” – என ஆஸாத் மௌலானா குறிப்பிடுகின்றார்.

இதையடுத்து இஸ்லாமிய தீவிரவாத அமைப்பான தேசிய தவ்ஹீத் ஜமாத்தை (NTJ) சேர்ந்த செய்னி மௌலவியை தான் சந்தித்தார் எனவும் –

கடந்த 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பிள்ளையான் உளவுத்துறை அதிகாரி சுரேஷ் சலேக்கும் அந்த அமைப்பினருக்கும் இடையில் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்யுமாறு தன்னிடம் கூறினார் எனவும் ஆஸாத் மௌலானா குறிப்பிடுகின்றார்.

இதையடுத்துத் தான் தேசிய தவ்ஹீத் ஜமாத்தை (வேது) சேர்ந்தவர்களுக்கும் உளவுத்துறை அதிகாரி சுரேஷ் சலேக்கும் இடையிலான சந்திப்பை ஏற்பாடு செய்தார் எனவும், சந்திப்பு நிறைவடைந்து வெளியில் வந்த சுரேஷ் சலே “ராஜபக்ஷர்களுக்கு இலங்கையில் ஒரு குழப்பமான நிலை தேவையாக உள்ளது. அதுவே கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்க ஒரேயொரு வழி” என்று கூறினார் எனவும் ஆஸாத் மௌலானா அக்காணொலியில் குறிப்பிடுகின்றார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற பின்னர், முன்னர் யாரெல்லாம் சந்திப்பில் கலந்துகொண்டார்களோ அவர்களின் முகங்களைத் தான் அடையாளம் கண்டார் எனவும், பிள்ளையானிடம் இதுபற்றி கேட்ட போது “நீ வாயை மூடிக்கொண்டு எதுவும் தெரியாதது போல் இரு. அது போதும்” என அவர் தன்னிடம் கூறினார் எனவும் தெரிவிக்கும் ஆஸாத் மௌலானா, “சொந்த மக்களையே ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற அவர்கள் கொலைசெய்தார்கள். இதுவொரு கசப்பான உண்மை” – என்கிறார்.

பிரித்தானிய தொலைக்காட்சி அலைவரிசையில் இன்று ஒளிபரப்பப்பட்ட ‘சனல் – 4 டிஸ்பாட்ச்கள்’ ஆவணப்படத்தின் முன்னோட்டத்தில் இந்த கருத்துகளை ஆஸாத் மௌலானா குறிப்பிடுகின்றார்.

இதன் முழுமையான ஆவணப்படம் பிரித்தானிய நேரப்படி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 11 : 05 க்கு வெளியாகவுள்ளது.

## 7 பேருக்கு...

குருநாகல் மலியதேவ மகளிர் கல்லூரியில் இருந்து வர்த்தகப் பிரிவில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய அவர், மூன்று ஏ சித்திகளைப் பெற்றுள்ளார்.

மாவட்ட மட்டத்தில் 176 ஆவது இடத்தையும், தேசிய மட்டத்தில் 2 ஆயிரத்து 256 ஆவது இடத்தையும் அவர் பெற்றுள்ளார். 1.7 இஸட் புள்ளிகளை அவர் பெற்றுள்ளார்.

குருநாகல் பகுதியில் மூளைப் புற்று நோய் காரணமாக மூளைச்சாவடைந்த மாணவியொருவர் தனது உடல் உறுப்புகளை வழங்கி 7 பேரின் உயிர்களைக் காப்பாற்றிய நெகிழ்ச்சியான சம்பவம் அண்மையில் இடம்பெற்றது.

இலங்கையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைத்திய நிபுணர்கள் குழுவொன்று இதயம் மற்றும் நுரையீரல் இரண்டையும் ஒரே நோயாளிக்கு மாற்றுவதற்கான முதல் சத்திர சிகிச்சையை மேற்கொண்டு சாதனை படைத்தது.

இதன்போது உறவினர்களின் அனுமதியுடன் மூளைச்சாவடைந்த மாணவியின் இதயம் மற்றும் நுரையீரல்கள் என்பன இதயம் மற்றும் நுரையீரல் செயலிழந்து ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வந்த மருந்துவ நிபுணருக்குப் பொருத்தப்பட்டன.

குறித்த மாணவியிடமிருந்து எடுக்கப்பட்ட இரண்டு சிறுநீரகங்களும் குருநாகல் போதனா வைத்தியசாலையின் சிறுநீரகப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நோயாளி ஒருவருக்கு வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டன.

மேலும், கல்லீரல் மற்றும் கண் சவ்வுகள் என்பன மூன்று பேருக்கு ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உதவும் வகையில் வழங்கப்பட்டமையுடன் விஹகனாவின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட ஏனைய உறுப்புகள் மூலம் மொத்தம் ஏழு பேரின் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன.

## செல்வம், சார்ள்ஸ்...

ஆகியோருக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய வழக்கு நீதிமன்றில் அழைக்கப்பட்ட போது, நீதிமன்றிற்கு சமூகமளிக்காத செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன் மற்றும் சிவாஜிலிங்கம் ஆகியோருக்குப் பிடியாணை பிறப்பித்தது.

இலங்கையின் சுதந்திர தினத்தன்று, யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கரிநாள் பேரணியில் கலந்து கொண்டு, அமைதிக்குப் பங்கம் விளைவித்தனர் என அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

இதனடிப்படையில், செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் யாழ். மாநகர சபை முன்னாள் முதல்வர் வி. மணிவண்ணன் ஆகியோருக்கு எதிராக யாழ்ப்பாண பொலிஸாரினால் யாழ். நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் வழக்கு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

## கொலைக்குற்றவாளிகள்...

கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெலிகம பகுதியில், ரி – 56 ரகத் துப்பாக்கியுடன் சிலர் நடமாடுகின்றனர் என்று பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய சோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டமையுடன், அவர்கள் பயணித்த கார் ஒன்றும் கையகப்படுத்தப்பட்டது.

கைதானவர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## சீரற்ற காலநிலையால்...

கேகாலை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, காலி, மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

பலத்த மழை மற்றும் காற்றால் நாடளாவிய ரீதியில் 122 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

## சுமந்திரன் ஜெனிவா...

இலங்கை விவகாரம் தொடர்பாக ஆராய்வதற்காக பிரித்தானியா ஒழுங்கு செய்துள்ள இந்தக் கூட்டம் நாளை நடைபெறுகின்றது .

இதை ஒழுங்கு செய்துள்ள பிரித்தானியத்தரப்புசுமந்திரனையும்,Amnesty Sri Lanka அமைப்பிலிருந்து ஒரு பிரதிநிதியையும் இக்கூட்டத்துக்கு அழைத்துள்ளது எனத் தெரியவருகின்றது.



# உயிரியல் விஞ்ஞான பிரிவில் மன்னாரில் முதல் இடம்

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் 2022 ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தர பரீட்சையில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மாணவன் அன்ரனி சரோன் டயஸ் மாவட்ட ரீதியாக முதலாம் இடத்தையும் அகில இலங்கை ரீதியாக 801 ஆம் இடத்தையும் பெற்று மாவட்டத்துக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

மன்னார் பனங்கட்டுகொட்டு பகுதியை சேர்ந்த அன்ரனி சரோன் டயஸ் உயிரியல், பௌதீகவியல், இரசாயனவியல் ஆகிய மூன்று பாடங்களிலும் '3 ஏ' தரச் சித்திகளைப் பெற்று மாவட்ட ரீதியில் முதல் இடத்தை பெற்றுள்ளார்.



# முல்லைத்தீவு மாணவி வர்த்தகப் பிரிவில் முதலிடம்

இறுதி யுத்தத்தில் தந்தையை இழந்து தாய் மற்றும் அப்பம்மா ஆகியோரின் அரவணைப்பில் வாழ்ந்து வந்த டொறின் ரூபகாந்தன் கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையில் வர்த்தக பிரிவில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

வர்த்தக பிரிவில் '3ஏ' சித்திகளைப் பெற்று மாவட்ட ரீதியில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

வர்த்தக பிரிவில் பொருளியல் , வணிகம் , கணக்கியல் ஆகிய பாடங்களில் 3 ஏ சித்திகளையும் ஆங்கிலம் பாடத்தில் எஸ் பெறுபேற்றையும் பெற்று மாவட்ட ரீதியில் முதலாவது இடத்தையும் தேசிய மட்டத்தில் 728 ஆவது இடத்தையும் பெற்று பாடசாலைக்கும் மாவட்டததுக்கும் பெருமை சேர்த் துள்ளார்.

# சாய்ந்தமருது அஸ்றப் மாணவர்கள் கௌரவிப்பு






(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை கல்வி வலயத்துக்கு உட்பட்ட லீடர் எம்.எச்.எம்.அஸ்ரப் வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் முன்னோடிப் பரீட்சையில் 150 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் மற்றும் கோட்ட மட்ட, வலய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற பொதுக் காலைக் கூட்டத்தில் பாடசாலை அதிபர் எம்.எம்.சம்சுதீன் தலைமையில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

# அரச ஓய்வூதியத் திட்டத்தில் சிறாரை இணைக்கும் நிகழ்வு



(எம்.எப்.நவாஸ்)

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் அரச ஓய்வூதிய திட்டத்தின் கீழ் முன்பள்ளி பாடசாலை மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நிகழ்வுகள் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமது ஷாபிர் வழி காட்டலில், உதவிப் பிரதேச செயலர் நஹீஜா முஸாபிரின் நெறிப் படுத்தலில் இடம்பெற்று வருகின்றது.

அந்தவகையில் அட்டாளைச்சேனை ஆலம்குளம் அஷ்ரஃப் ஞாபகார்த்த முன்பள்ளி பாடசாலை மாணவர்களை இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் அரச ஓய்வூதிய திட்டத்தில் இனணத்துக் கொள்ளலும் புத்தகம் வழங்கும் நிகழ்வும் பிரதேச செயலகத்தின் இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் விடயப் பொறுப்பாளர் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எல்.நஜிமுடீன் ஏற்பாட்டில் நேற்று (04) அஷ்ரப் ஞாபகார்த்த முன்பள்ளி பாடசாலையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிராம சேவகர் எம்.ஆர்.முஸாதிக் , சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.நஜிமுடீன் , அஷ்ரஃப் ஞாபகார்த்த முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களும் கலந்து கொண்டார்கள்.

# நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## அயல் தேச அணுகுமுறை

“இந்தியாவின் மதிப்புமிக்க அண்டை நாடு இலங்கை. அதன் நெருக்கடியான காலகட்டங்களில் அதன் தேவைகளை இந்தியா பெரிதும் உணர்ந்துள்ளது.” - என்று கூறியிருக்கின்றார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி. கடந்த வார இறுதியில் பி.ரி.ஐ. செய்தி நிறுவனத்திற்கு வழங்கிய ஒரு பிரத்தியேக பேட்டியிலேயே அவர் இது குறித்துக் கூறியிருக்கின்றார்.

உலகில் பொருளாதார நெருக்கடியில் சிக்கி இருக்கும் வளரும் நாடுகளுக்கு - கடனில் மாட்டியுள்ள குறைந்த வருமானம் கொண்ட பொருளாதாரக் கட்டமைப்புகளுக்கு - வளர்ந்த மற்றும் அபிவிருத்தி அடைந்த நாடுகள் உதவுவது பற்றி இந்தப் பேட்டியில் பிரஸ்தாபித்திருக்கின்றார் இந்தியப் பிரதமர்.

ஜி-20 கட்டமைப்பின் தற்போதைய தலைவர் என்ற முறையில் இந்த விடயங்களை இந்தியப் பிரதமர் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

‘உடுக்கை இழந்தவன் கை போல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு’ - என்ற திருநாப்போதகன் வள்ளுவனின் உரைக்கு அமைய, நெருக்கடியில் சிக்கி, மீள முடியாமல் அந்தரித்த இலங்கைக்கு, நெருங்கிய அயல் தேசம் என்ற முறையில் இந்தியா விரைந்து வந்து அளித்த உதவிகள் அளவிட முடியாதவை.

‘காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது’ - என்றான் வள்ளுவப் பெருந்தகை. அன்று இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருந்த சமயத்தில் தேடி வந்து உதவியது பாரதம். அது அளப்பரிய உதவி. அது சிறிதாக இருந்திருந்தால் கூட ஞானத்தில் பெரிதாகக் காணப்பட - கணிப்பிட - வேண்டும்.

கடன்களை மீளச் செலுத்த வகையற்ற நாடாகி, உலகின் உதவி ஏதும் கிட்டாமல், பெரும் அழிவின் விளிம்பில் இருந்த இலங்கையை மீட்டெடுக்க, பிரதி பலன் பார்க்காமல் உதவியது இந்தியா.

ஆகவே, இலங்கையின் நெருக்கடியான காலகட்டங்களில் அதன் தேவைகளை இந்தியா பெரிதும் உணர்ந்துள்ளது என்ற மோடியின் கூற்று வெறும் வாய் வார்த்தைகள் அல்ல. உணர்வு பூர்வமாக உணர்ந்து இந்தியா வெளிப்படுத்திய கருத்து நிலைப்பாட்டின் சிந்தனைத் தெறிப்புதான் அது.

ஆனாலும், பாரதத்தின் அத்தகைய உதவிகளைப் பெற்ற இலங்கை, அந்த நாட்டுக்கு அதற்குரிய உயரிய பண்புகளுடன் பிரதிபலிப்பைக் காட்டியதா - காட்டுகின்றதா - என்பதே கேள்வி.

‘நெருங்கிய அயல் தேசத்துக்கு முன்னுரிமை’ - என்ற கருத்தியலைத் தனது வெளியுறவுக் கொள்கையில் வெளிப்படையாக முக்கியத்துவம் கொடுத்து நிற்கின்றது இந்தியா. அதன் கீழ்தான் இலங்கையைத் தனது உற்ற சகோதர தேசமாக முன்னிலைப்படுத்தி உதவுகின்றது அந்நாடு.

ஆனால் இந்த உதவிகளைப் பெறும் தகுதி நிலையில் இலங்கை இருக்கின்றதா என்ற கேள்விதான் அந்த நாட்டின் பிரஜைகள் என்று அடையாளப்படுத்தப்படும் நமக்கு - குறிப்பாக தமிழருக்கு - எழுந்துள்ளது.

‘நெருங்கிய அயல் தேசத்திற்கு முன்னுரிமை’ என்று செயல்படுகிறது இந்தியா. அதன் மூலமாக உதவிகளை உச்சமாகப் பெற்று ஏப்பமிடும் இலங்கை, அதற்குப் பதிலாக ‘அணிசேரா வெளியுறவுக் கொள்கை’ என்ற சமாளிப்புத் சித்தாந்தத்தில் இந்தியாவையும், அதன் பிரச்சினைக்குரிய அயல் தேசமான சீனாவையும் ஒரே அளவு உறவு தூரத்தில் வைத்திருக்கின்றோம் என்ற பெயரில், சீனாவையும் அரவணைத்து, இந்தியாவை நெருக்கடியில் ஆழ்த்தி நிற்கின்றது.

இந்தியாவையும் சீனாவையும் ஒரே தூரத்தில் வைத்துக் கணிப்பிடும் தனது போக்கை கொழும்பு மாற்றி, அயல் தேசத்தை அரவணைத்து, முன்னுரிமை கொடுத்து, நெருங்கிச் செயல்படுவது இலங்கையின் நலனுக்கு மட்டுமல்லாமல், இந்தப் பிராந்தியத்தின் நலனுக்கும் உகந்தது.





## கால் நடைகளை வெட்டுவது தொடர்பான விழிப்புணர்வு

(நூருல் ஹுதா உமர், நிப்றாஸ் மன்சூர்)

உணவுக்காகக் கால்நடைகளை வெட்டுவது தொடர்பான மார்க்க சட்டவிதிகளும் ஜீவகாருண்யமும் எனும் தொனிப் பொருளிலான விழிப்புணர்வுக் கருத்தரங்கு கல்முனை அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத் உலமா சபையின் ஏற்பாட்டில் கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் சனிக்கிழமை (2) நடைபெற்றது.

கல்முனை அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத் உலமா சபையின் தலைவர் மௌலவி அல் ஹாஜ் பி.எம்.ஏ. ஜலீல் (பாக்கவி) தலைமையில் நடைபெற்ற இவ்விழிப்புணர்வுக் கருத்தரங்கில் உலமாக்கள்,கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் மற்றும் கல்முனை கடற்கரை பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகை தர்ஹா ஷரீப் நிர்வாக சபையின் தலைவர் டாக்டர் அல்ஹாஜ் எஸ்.எம்.ஏ. அஸீஸ், சுகாதார பரிசோதகர்கள், கிராம சேவை அதிகாரிகள், கல்முனை, சாய்ந்தமருது, நற்பட்டிமுனை, மருதமுனை பிரதேசங்களிலிருந்து வருகைதந்த பிராணிகளை அறுப்பவர்கள் மற்றும் ஆடு, மாடு, கோழி இறைச்சி போன்றவற்ற விற்பனை செய்துவரும் வியாபாரிகள் உற்பட பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

## நுவரெலியாவில் சர்வதேச தரத்திலான வனவியல் பயிற்சிக் கல்வியகம்

நுவரெலியா, ஹவாஎலியா, சண்தன்ன பிரதேசத்தில் சர்வதேச தரத்துக்கு அமைவாக நிர்மாணிக்கப்பட்ட இலங்கை வனவியல் கல்வியகம் வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாராய்ச்சியால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

53 ஹெக்டெயர் பரப்பளவில் இந்த நிறுவனம் 1500 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது. உள்ளூர் , சர்வதேச வனவிலங்கு , சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் இந்த வனவியல் நிறுவனத்தில் பயிற்சி பெறலாம்.

வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் வருமானத்தை பெறக் கூடிய கற்றல்களைஆரம்பிக்கவும், சுற்றுச்சூழல், காடுகளை விரும்புவோருக்கு அந்தக் கற்றல்களை மேற்கொள்ளும் வாய்ப்பை வழங்கவும் முடிவு செய்துள்ளது.

இதன்படி, பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், பாடசாலையை விட்டு வெளியேறுபவர்கள், வெளிநாட்டவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் இந்தப் பாடநெறிகளில் இணைய முடியும்.

வளாகத்தில் 17 உத்தியோகபூர்வ குடியிருப்புகள், ஒரு விளையாட்டு அரங்கம், 80 பேர் தங்கக்கூடிய ஒரு தங்குமிடம், ஒரு நேரத்தில் 150 பேர் தங்கக் கூடிய ஒரு உணவகம், ஒரு ஒடிட்டோரியம், ஒரு நிர்வாக கட்டடம், விரிவுரை மண்டப வசதிகள், ஒரு நூலகம், ஒரு வாகன நிறுத்துமிடம் போன்ற வசதிகள் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நீதிமன்ற சட்டவாட்சியை விமர்சித்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்

## உச்ச நீதிமன்ற நீதியரசர் திலீப் நவாஸ் தெரிவிப்பு



(பாறுக் ஷிஹான்)

நீதிமன்றத்தின் சட்டவாட்சியையும் அதிகாரங்களையும் சில பேர்வழிகள் கேள்விக்குட்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனை நாம் அவதானித்துள்ளோம். இவ்வாறானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு உச்ச நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம். திலீப் நவாஸ் இவ்வாறு தெரிவித்தார்.

உச்ச நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம். திலீப் நவாஸ் மற்றும் ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கலாநிதி யூ.எல்.ஏ. மஜீத் ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வு சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்துள்ளவை வருமாறு–

நீதிமன்றங்களும், சட்டத்துறைகளும் சவால்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. நீதிமன்றத்தின் சட்டவாட்சியையும் அதிகாரங்களையும் சில பேர்வழிகள் சவாலுக்கு உட்படுத்தும் நிலையை அவதானிக்க முடிகிறது. எனவே இது தொடர்பில் நீதிபதிகள் தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டும்.

நீதிமன்றத்தை அவமதிக்கும் குற்றச் செயல் உங்கள் முன்னாள் நடக்குமென்றால், நீதிபதிகளே அந்த வழக்கை எடுத்து விசாரித்து, அவமதிப்பைச் செய்தவருக்கு தண்டனை வழங்க முடியுமென்று லோட் டெனிங் எழுதிய 'சட்டத்தின் ஒழுக்கம்' எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு என்பது நீதிபதிகளை அவமதிக்கவில்லை. அது நீதிமன்ற ஆட்சியையும், அதிகாரத்தையும் கேள்விக்கு உட்படுத்துகிறது. எனவே, நீதிமன்ற அவமதிப்பு என்பதை நீதிபதிகள் தனிப்பட்ட விடயமாக எடுக்கத் தேவையில்லை.– என்றார்.

இதன் போது ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கலாநிதி யூ.எல்.ஏ. மஜீத் எழுதிய 'Law of Actions' என்ற நூலின் அறிமுகமும் இடம்பெற்றது.

# ஹட்டன் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் தினத்தில் விஷேட பூசை



157 ஆவது பொலிஸ் தினத்தை முன்னிட்டு ஹட்டன் பொலிஸ் நிலையத்திலும் விஷேட பூசை நிகழ்வுகள் ஹட்டன் வலய பொலிஸ் அத்தியட்சகர் நிபுன தெஹி ஹம தலைமையில் இடம்பெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை ஹட்டன் இஸ்லாமிய பள்ளி வாசலில் சமய நிகழ்வுகள் ஹட்டன் வலய பொலிஸ் அதிகாரி நிப்புண தெஹி ஹம தலைமையில் இடம்பெற்றது.

மேலும் ஒரு சமய நிகழ்வு ஹட்டன் மாணிக்க பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் ஹட்டன் வலயத்தின் உயர் அதிகாரி மற்றும் ஏனைய அதிகாரிகள் பொலிஸார் கலந்து கொண்டு கொண்டனர்.

# நாட்டில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கு அரசு உடன் பதில் வழங்க வேண்டியது அவசியம்

## ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்





(ஹஸ்பர்)

வரலாற்றில் என்றும் இல்லாத அளவுக்கு நாட்டு மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். நாட்டின் சுகாதார துறையின் பிரச்சினைகள் மாத்திரம் அல்ல, மக்கள் உயிர் வாழ்வதற்கும் கூட முடியாத நிலை காணப்படுகிறது.இந்நிலையில் அரசின் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு உடனடியாக பதில் வழங்க வேண்டும்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்தார்.

அநுராதபுர மாவட்ம முஸ்லிம் லீக் வாலிப சம்மேளனம் நடத்திய இளைஞர் யுவதிகளுக்கான ஒரு நாள் தலைமைத்துவ செயலமர்வு கடந்த 02 ஆம் திகதி அநுராதபுரம் சீரிசீ வரவேற்பு மண்டபத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு–

வரலாற்றில் என்றும் இல்லாதவாறு மக்கள் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். நாட்டில் சுகாதார துறையின் பிரச்சினைகள் மாத்திரம் இன்றி மக்களுக்கு உயிர் வாழ்வதற்கும் கூட முடியாத நிலை காணப்படுகிறது.

சுகாதாரத்துறையை எடுத்துக்கொண்டால் மருந்துத் தட்டுப்பாடு, தரமற்ற மருந்து கொள்வனவு, விசேட வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள் வெளியேற்றம் என பிரச்சினைகளை அடிக்கிக் கொண்டே போகலாம். ஆசியா நாடுகளில் மருந்து கொள்வனவுக்கு அதிகம் நிதி ஒதுக்கும் நாடாக இலங்கை காணப்படுகிறது.

இந்த நிலையில் சுகாதார துறையில் பல பிரச்சினைகள் உள்ளன. இது மக்களின் உயிர் தொடர்பிலான முக்கிய பிரச்சினை. இதற்கு அரசிடம் எந்தவொரு தீர்வுகளும் இல்லை. அரசாங்கத்தின் மீது ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதற்கு பதில் வழங்க வேண்டியுள்ளது.

எமது அரசில் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவோம். பொருளாதாரம், சுகாதாரம், விவசாயம் என அனைத்துத் துறைகளிலும் தெளிவான கொள்கைகளை கொண்டு பயணிப்போம். நாட்டைக் கட்டியெழுப்பச் சரியான தீர்மானங்களை முன்னெடுக்க வேண்டும். தவறான தீர்மானங்கள் எடுப்பதை நிறுத்த வேண்டும்.

சமூகத்தில் உயர் மட்டத்தில் உள்ளவர்களைப்ண பாதுகாக்கவும், அவர்களுக்கு நிவாரணம் வழங்கவும் நடவடிக்கை எடுக்க கூடாது. வறிமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் நிலைமை கண்டு ஆட்சியாளர்கள் கவலை அடைவதில்லை.– என்றார்.

இந்த நிகழ்வில் வளவாளர்களாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறை சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி மஹீஷ், இலங்கை நாடாளு மன்றத்தின் சிரேஷ்ட ஆய்வாளர் எம்.அஜிவதீன், ஜோர்தான் சர்வதேச இஸ்லாமிய மருத்துவ சங்க சம்மேளனத்தின் பயிற்றுநரும், ஊக்குவிப்புப் பயிற்றுநருமான அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம்.இர்ஹாம் ஷரபி ஆகியோர் கலந்து கொண்டனர்.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் முன்னாள் தேசிய தலைவர்களில் ஒருவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

சம்மேளனத்தின் தேசிய தலைவரும், இலங்கை சுங்கத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளருமான லுக்மான் சஹாப்தீன், முன்னாள் தேசிய தலைவர்களில் ஒருவரும், தேசிய ஷூரா சபையின் பொதுச் செயலாளருமான ரஷீத் எம் இம்தியாஸ், சம்மேளனத்தின் பிரதி தேசிய தலைவரும், கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினருமான ஷாம் நவாஸ், சம்மேளனத்தின் தேசிய செயற்றிட்டப் பணிப்பாளர் பௌசர் பாரூக் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் தீர்த்தம்



மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் ஆலய தீர்த்தத் திருவிழா நேற்று (04) இடம் பெற்றது.

தீர்த்தத் திருவிழா ஆலயத்தின் பிரதான பாதையில் கிழக்கு புறமாகப் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தீர்த்தக் கேணியில் இடம் பெற்றது.

இந்தத் தீர்த்தக் கேணியில் இனி வரும் காலங்களில் தீர்த்தோற்சவ நிகழ்வுகள் இடம் பெறவுள்ளது என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.









# மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கொள்ளுப் பேரனுக்கு பெருவரவேற்பு!

**(பழுவூரான், வி.ரி. சகாதேவராஜா)**

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கொள்ளுப் பேரனும் பிரபல தென்னிந்தியப் பாடகரும், இசையமைப்பாளரும், பொறியியலாளருமான ராஜ்குமார் பாரதிக்கு மட்டக்களப்பில் பெருவரவேற்பு அளிக்கப்பட்டது.

மாவட்ட அரச அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவால் நேற்று திங்கட்கிழமை (04) அவருக்குப் பொன்னாடை போர்த்துக் கௌரவம் வழங்கப்பட்டது.

மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கருத்து தெரிவித்த மகாகவியின் பேரன் பாரதி கண்ட புதுமைப் பெண்ணை இங்கு காண்பதாகவும், இவ்விடத்தை பாரதி, பார்த்தால் தான் கண்ட இப் புதுமைப் பெண்களை பார்த்து மகிழ்ந்திருப்பார் என்றும் தெரிவித்தார்.

இதன் போது மகாகவியின் வாழ்க்கை வரலாற்றில் இடம்பெற்ற சுவாரஷ்யமான நிகழ்வுகளை கொள்ளுப்பேரன் பாடலாகவும், கதையாகவும் கூறி மீட்டினார்.

இதன்போது மாவட்ட அரச அதிபரினால் சிறப்பு கௌரவம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த், கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி புளோரன்ஸ் பாரதி கெனடி உட்பட அதிதிகள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். கலாநிதி இராஜ்குமார் பாரதி மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் ஆச்சிரமத்துக்கும் விஜயம் செய்தார்.

அவரை மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் இல்லத்தின் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் வரவேற்றார்.

கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அடிகளார் அழகியல் கற்கை நிறுவகத்தின் பணிப்பாளர் பேராசிரியர் புளோரன்ஸ் பாரதி பேராசிரியர் சி. மௌனகுரு உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் ஆகியோரும் கலந்து சிறப்பித்தார்கள்.

இல்ல மாணவர்களுடன் அளவளாவிய கலாநிதி இராஜ்குமார் பாரதி, பாரதியார் பாடல்களை நினைவு கூர்ந்தார்.

மீன்பாடும் தேன் நாட்டுக்கு வருகை தந்த ராஜ்குமார் பாரதி, மகாகவி சுப்பிரமணியாரின் மகளான தங்கம்மாவின் புதல்வி லலிதா பாரதிக்கு மகனாகப் பிறந்தவர்.

இவர் இலத்திரனியல் மற்றும் தொலைத் தொடர்பாடல் பொறியியலாளரும், இந்தியாவின் பிரபல கர்நாடக இசைக் கலைஞராகவும், பின்னணிப் பாடகராகவும் செயற்பட்டுவருகிறார்.





# நினைவுகளை மீட்கும் வெள்ளிவிழா!

(ஹஸ்பர்)

திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் 1998 ஆம் ஆண்டில் உயர்தரத்தில் கல்வி கற்றவர்கள் 25 ஆண்டை நினைவு கூறும் முகமாக ஏற்பாடு செய்திருந்த நினைவுகளை மீட்கும் வெள்ளிவிழா சனிக்கிழமை திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் சி . தண்டாயுதபாணியும், கௌரவ விருந்தினர்களாக முன்னாள் அதிபர் மா. இராசரெத்தினம்,இந்துக் கல்லூரியின் தற்போதைய அதிபர் வி. இராஜேந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். 1998 ஆம் ஆண்டில் உயர்தரத்தில் கற்பித்த ஆசிரியர்கள் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்தனர்.

1998 ஆம் ஆண்டு உயர்தர பிரிவில் கல்வி கற்ற மாணவர்கள் குடும்பத்தினருடன் விழாவில் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.




# கொக்கட்டிச்சோலையில் சமுர்த்தி வங்கியின் சமூகப் பணி

(கல்முனை நிருபர்)

கிழக்கில் தான்தோன்றிய சிவலிங்கம் அமையப்பெற்ற கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய தேர்த் திருவிழாவை முன்னிட்டு பக்தர்களுக்குத் தாகசாந்தி நிகழ்வு கொக்கட்டிச்சோலை சமுர்த்தி வங்கியால் முன்னெடுக்கப்பட்டது. வலய முகாமையாளர் மோசேஸ் புவிராஜ் தலைமையில் வங்கி வலய சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் முழுமையான பங்களிப்புடன் வங்கி கட்டுப்பாட்டு சபையினரின் ஒத்துழைப்புடன் கொக் கட்டிச்சோலை வங்கியின் முன்றலில் கடந்த ஞயிற்றுகிழமை (03) இடம்பெற்றது.

# இயற்கை நியதியை மாற்றும் விஞ்ஞானம்!

அபிவிருத்தியடைந்த நாடுகளில் இன்று பல தொழல் நுட்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அவை மனிதர்களது வாழ்க்கையில் பல அபரிமிதமான மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. வஞ்ஞானத்தின் வளர்ச்சியால இன்று மனிதர்களது சிக்கல் மிகுந்த வாழ்க்கையானது, சுலபமாக்கப்படுகிறது. அவ்வாறு மானுடனின் வாழ்க்கையில் பாரிய சிக்கலாகக் காணப்படும் குழந்தையின்மை



தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வாக உலக நாடுகளில் பரவலாகவும், வெற்றிகரமாகவும் செயற்படும் தொழிநுட்பமாக 'கருமுட்டை உறைதல்' அமைகிறது.


கருமுட்டை உறைதல் அல்லது கருமுட்டை வங்கி என்பது செயற்கைக் கருத்தரிப்பு நுட்பத்தின் ஒரு செயற்பாடாகும். இதன் மூலம் பெண்களின் கருமுட்டைகளை உறைய வைத்தப பின்னர் பயன்படுத்தலாம். இச் செயற்பாட்டின்போது முதிர்ந்த கரு முட்டைகள் கருப்பையில் இருந்து அகற்றப்பட்டு ஒரு ஆய்வகத்துக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. அங்கு கருமுட்டைகள் எதிர்கால பயன்பாட்டுக்கு ஏற்ற சரியான வெப்பநிலையில் உறைய வைக்கப்படுகின்றன. இவ்வாறு ஆய்வகத்தில் உறைய வைக்கப்படும் கருமுட்டைகளில் தேவைப்படும் பொழுது விந்தணுக்களை செலுத்தி அதன்பின்னர் கருவுற்ற முட்டையைப் பெண்ணின் கருப்பையில் செலுத்தலாம்.

பல்வேறு காரணங்களுக்காகக் குழந்தை பிறப்பை பிற்போடும் பெண்கள் தங்கள் கருவுறுதலைப் பாதுகாக்கவும் கட்டுப்படுத்தவும் இந்த முறைமையைத் தேர்ந்தெடுக்கின்றனர். பெரும்பாலும் வயதாகும்போது பெண்களது கருமுட்டையின் தரம் குறைவடைய ஆரம்பிக்கின்றது. இந்தச் சூழலில் உறைய வைத்த கருமுட்டைகளைப் பயன்படுத்திக் கருவுறுதலில் வெற்றியைப் பெறலாம். இதன் மூலம் கருவுறுதல் சிகிச்சையையும் தவிர்க்கலாம்.

மருத்துவ தேவைகள், மாற்றமடையும் விருப்பங்கள் குழந்தை பெறுதலைத் தள்ளிப்போட விரும்பும் பெணகளுக்குக் கருமுட்டையை உறைய செய்யும் தொழிநுட்பம் ஒரு வரப்பிரசாதமாகும். கருவுறுதல் மருத்துவத் துறையில் ஐ.வி.எவ்க்குப் பின்னர் கருமுட்டை உறைதல் என்பது ஒரு மிகப்பெரிய தொழிநுட்ப முன்னேற்றமாகும். திருமணம் ஆகாத பெண்களும் இந்த தொழிநுட்பம் மூலம் தங்களின் தரமான கருமுட்டைகளை பாதுகாத்து வைத்துக் கொள்கின்றார்கள். இன்றைய போட்டி உலகில் தொழிலில் எந்தத் தடையும் இன்றி தாம் தொடர்ச்சியாக தொழில்புரிய விரும்பும் பெண்கள் குடும்ப சூழல் காரணமாக குழந்தை பெறுதலை தள்ளிப்போட விரும்பும் பெண்கள் கருமுட்டை உறைதல் செயல்முறைக்கு முன்னுரிமை அளிக்கிறார்கள்.

இன்று உலகளவில் பல பெண்கள் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறு புற்றுநோய் சிகிச்சைக்கு உட்படுத்தப்படும் பெண்கள் கீமோதெரபி அல்லது ரேடியோதெரபி உள்ளிட்ட சில புற்றுநோய் சிகிச்சைகளை மேற்கொள்வர். இப் புற்று நோய்ச் சிகிச்சைகள் பெண்ணின் கருவுறதலைப் பாதிக்கும்.

எனவே புற்றுநோய் சிகிச்சைக்கு முன் கருமுட்டை உறைதல் செயல் முறையைச் செய்து எதிர்காலத்தில் உயிரியல் குழந்தைகளைப் பெறலாம்.



வயது சார்ந்த கருவுறாமை பிரச்சினையைப் பற்றிக் கவலையுறும் பெண்களுக்குக் கருமுட்டை உறைதல் ஒரு நல்ல தீர்வாக அமைகிறது. இந்தச் செயன்முறைக்கு உகந்த வயதெல்லையாக 20 முதல் 30 வயது கூறப்படுகிறது. இந்த வயதில் ஒரு பெண்ணால் தரமான கருமுட்டைகளை உற்பத்தி செய்ய முடியும். மேலும் எப்போது தாய்மை அடைய வேண்டும் என்பதை இந்த வயதெல்லையில் தீர்மானிக்க முடியும்.

கருமுட்டை உறைதல் செயன்முறை இன்று அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் மட்டுமன்றி இந்தியாவிலும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இருப்பினும் இந்தியாவில் மிகவும் விலையுயர்ந்த செயல்முறைகளில் ஒன்றாக காணப்படுகிறது. இச்சிகிச்சைக்கான செலவானது இடத்துக்கு இடம் மாறுபடும். இந்தச் சிகிச்சையைச் சாதாரண மக்களால் அணுக முடியாது என்பது இதன் குறைபாடாக உள்ளது. இந்தச் சிகிச்சைக்கான விலைகள் மருத்தவமனைக்கு ஏற்ப வேறுபடுகின்றன. எனவே மருத்துவமனை தேர்ந்தெடுப்பதற்கு முன் விலைகளை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். கருமுட்டையிலிருந்து முட்டைகளை அகற்றுவது விட்ரிபிகேஷன் மூலம் முட்டைகளை உறைய வைப்பது மற்றும் திரவ நைட்ரஜெனில் கருமுட்டைகளை சேமித்து வைப்பது உள்ளிட்ட இந்தச் செயல்முறைகளின் மதிப்பிடப்பட்ட செலவு சுமார் 1.5 இலட்சம் ரூபாவாகும் (இந்திய பெறுமதியில்). கருமுட்டைகளை உறைய வைக்கும் இந்த செயல்முறையானது உறை நிலை நேரம், மருந்துகள், ஆய்வக செலவுகள், கருத்தரித்தல் மற்றும் சேமிப்பு செலவுகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

குழந்தையின்மை பிரச்சினைக்கு வரப்பிரசாதமாக அமையும் இச்சிகிச்சை முறையானது சாதாரண மக்களுக்கு எட்டாத சிகிச்சை முறையாக உள்ளமையை மறுக்க முடியாது. கருமுட்டை உறைதல் பாதுகாப்பானதா என்ற ஐயம் மக்களிடம் எழுவதுண்டு. உறைந்த கருமுட்டைகள் மூலம் கருத்தரித்த முதல் குழந்தை 1986 ஆம் ஆண்டு பிறந்தது. அதற்குப் பிறகு இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் இந்தச் செயல்முறையின் மூலம் உலகுக்கு வந்துள்ளனர்.

உறைந்த கருமுட்டைகள் மூலம் கருத்தரித்த குழந்தைகளில் பிறவி குறைபாடுகளின் விகிதத்தில் வெளிப்படையான அதிகரிப்பு இதுவரை காணப்படவில்லை. குழந்தைகளைப் பெறத் தயாராக இருக்கும் போது தரமான கருமுட்டைகள் கிடைக்கக் கூடிய வாய்ப்பை இக் கருமுட்டை உறைதல் செயல்முறை அளிக்கின்றது. மேலும் வயதாகும் போது கருமுட்டையின் தரம் குறையத் தொடங்



குகின்றது. இந்தச் சூழலில் உறைய வைத்த கருமுட்டைகளை பயன்படுத்தி கருவுறுதலில் வெற்றியைப் பெறலாம். இன்றைய நவீன தொழிநுட்பத்தின் வளர்ச்சியால் இவ்வுலகில் மனிதர்களின் கற்பனைக்கு எட்டாத விடயங்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)



# கல்வியியல் கல்லூரியில் தர்மலிங்கம் நினைவு பேருரை

மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி. தர்மலிங்கம் நினைவு பேருரை முதன் முறையாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் நேற்று (04) காலை நிகழ்த்தப்பட்டது

கல்லூரியின் பீடாதிபதி சு. பரமானந்தம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் அதிபர் செந்தமிழ் சொல்லருவி ச . லலீசன் 'தர்மலிங்கம் தந்த கொடை' என்ற பொருளில் நினைவு பேருரை ஆற்றினார்.

கல்வியியல் கல்லூரிக்கு தர்மலிங்கம் குடும்பத்தார் 220 பரப்புக் காணியை கோப்பாய் பிரதேசத்தில் உவந்து அளித்ததன் மூலம் ஏற்பட்ட நன்மைகளை விதந்து பேசினார். குறிப்பாகக் கடந்த 23 ஆண்டுகளில் 4500 ஆசிரியர்கள் பயிற்சி பெற்று இலங்கையின் பல பாகங்களிலும் சேவையாற்றுவதாக தெரிவித்தார்.

கல்லூரியின் கலாசார மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வுகளை கலாநிதி பா. தனபாலன் முன்னிலைப்படுத்தினார். நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் நிறைவுரை ஆற்றினார். கல்லூரி சமூகத்தினரும் மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங் கத்தின் அபிமானிகளும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# இயற்கை நியதியை...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூட மெய்ப்பிக்கப்பட்டுள்ளன. இதனை இன்றைய தலைமுறையில் வாழும் ஒவ்வொருத்தரும் எற்றுக் கொள்கின்றனர். அவ்வாறான ஒரு தொழிநுட்பத்தின் ஒரு உத்தியே இக்கருமுட்டை உறைதல் ஆகும். இது சாதகமான பல அம்சங்களை கொண்டிருந்தாலும் சில தீமைகள் இந்தப் படிமுறைகளில் இருக்கத்தான் செய்கிறன.

பொதுவாகக் கருமுட்டை உறைதலுக்காகச் செய்யப்படும் அறுவை சிகிச்சைகள் பாதுகாப்பானதாக கருதப்படுகிறது. ஆனால் இந்தச் செயல்முறையின்போது செலுத்தப்படும் ஹார்மோன் ஊசிகள் கருப்பை ஹைப்பர் ஸ்டிமுலெஷன் சின்ரோமில்(OHS) ' அபாயத்தை அதிகரிக்கின்றது. இது பெண்களுக்கு எதிர்காலத்தில் சில நோய்களை உண்டாக்கலாம். இதன் பக்க விளைவுகளாகப் பெண்களுக்கு வாந்தி, வயிற்றுவலி அல்லது தலைசுற்றல் போன்ற பிரச்சினைகள் தொடங்குகின்றன. பல சமயங்களில் அவ்வாறு உறைய வைத்து பயன்பாட்டுக்காக வெளியே எடுக்கப்படும் கருமுட்டைகள் செயற்பாட்டின் போது வாழாது இறந்து விடக்கூடும். இது குழந்தை பெறுவதற்கான வாய்ப்புகளைக் குறைக்கிறது. தங்கள் கருமுட்டைகளை உறைய வைக்கும் பெண்களுக்குக் கருமுட்டை மூலம் கருவுறுதலுக்கான சாத்தியங்கள் பல வருடங்கள்வரை தெரிவதில்லை. இந்தச் சூழலில் இயற்கையான முறையில் குழந்தை பெறுவதற்கான வாய்ப்பையும் இழக்க நேரிடும். இவ்வாற பல பக்க விளைவுகள் உள்ளன.

இன்று பல பிரபலங்களும் கருமுட்டை உறைதல் முறையூடாக வெற்றிகரமாக குழந்தைகளை பெற்றுள்ளனர். 1997 ஆம் அண்டில் உலக அழகிப் பட்டம் வென்ற டயானா ஹைடன் 30 வயதுக்குள் தனது கருமுட்டைகளை உறைய வைத்துப் பாதுகாத்த முதல் இந்தியப் பிரபலங்களுள் ஒருவராவார். இது தவிர பாலாஜி டெலிப்பிலிம்ஸின் கிரியேட்டிவ் ஹெட் மற்றும் இயக்குனரான ஏக்தா கபூர், தனது 36 வயதில் கருமுட்டைகளை உறைய வைத்ததாகவும் பின்னர் கருவுறுதலில் பல தோல்விகளை சந்தித்து வாடகைத் தாயின் மூலம் குழந்தை பெற்றதாகவும் ஒரு நேர்காணலில் பகிர்ந்துள்ளார்.

தென்னிந்திய சினிமாவில் முக்கியமான நடிகரான ராம்சரண் உபாசனா தம்பதிகள் திருமணம் ஆகி 10 வருடங்கள் கழித்துத் தமது குழந்தையைப் பெற்றனர். இவர்கள் கருமுட்டை உறைதல் சிகிச்சை மூலம் குழந்தை பெற்றமை குறிப்பிடத்தக்கது. ஹாலிவூட் மற்றும் பாலிவூட் நடிப்பில் தடம்பதித்த நடிகை பிரியங்கா சோப்ரா உட்பட கருமுட்டை உறைதல் முறையினூடாக தமது குழந்தைகளைப் பெற்றுள்ளனர். தனது 30 வயதின் முற்பகுதியில் கருமுட்டைகளை உறைய வைத்ததைப்பற்றி சமீபத்தில் போட்காஸ்ட் ஒன்றில் பகிர்ந்து கொண்டார் நடிகை பிரியங்கா சோப்ரா.

இக்கருமுட்டை உறைதல் சிகிச்சை பல மதிப்பீட்டுக்குப் பிறகு ஆரம்பிக்கப் படுகிறது. இந்த நடைமுறை மூன்று பகுதிகளாக மேற்கொள்ளப்படும். முதலில் ஒரு கருப்பை தூண்டுதல் செய்யப்படும். இதில் கருப்பையை தூண்டுவதற்கும் ஒரு முட்டைக்கு பதிலாக பல முட்டைகளை உருவாக்குவதற்கும் செயற்கை ஹார்மோன்கள் பெண்ணுக்குள் செலுத்தப்படும். பின்னர் இரத்த பரிசோதனைகள் மற்றும் வெஜினல் அல்ட்ரா சவுண்ட் உதவியுடன் நுண்ணறைகளின் வளர்ச்சியை (முட்டைகள் முதிர்ச்சியடையும் திரவம் நிறைந்த பைகள்) பார்க்க வேண்டும். கருப்பையின் உள்ளே நுண்ணறைகள் உருவாக சிறிது காலம் எடுக்கும். பின்னர் கருவுறாத முட்டைகள் மீட்டெடுக்கப்பட்டு எதிர்காலத்தில் பெண் கர்ப்பம் தரிக்க விரும்பும் போதெல்லாம் இதைப் பயன்படுத்தலாம். இவ்வாறான படிமுறைகளை கடந்த பின்னரே வினைத்திறனான கருமுட்டை உறைதல் சிகிச்சையை அணுக முடியும்.

மனித உடலில் காணப்படும் உயிரியல் கடிகாரத்தின் செயற்பாட்டை இக் கருமுட்டை உறைதல் தொழிநுட்பம் மாற்றிமைக்கிறது. தாய்மை எனும் புனிதமான நிலையை அடைவதே ஒரு பெண்ணின் ஆத்மார்த்தமான சந்தோசமாகும். அதற்குத் தடையாக அமையும் காரணிகளை இன்றைய நவீன தொழிநுட்பத்தின் உதவியுடன் இலகுவாகக் கடந்து செல்ல முடிகிறது. இயற்கை என எண்ணியவை அனைத்தும் இன்று செயற்கை நவீன தொழில்நுட்பத்தின் ஊடாக மாற்றிமைக்கப்படுகிறது.

**ச.தனுக்ஷ்கா,**
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

# ஆறு மாநிலங்களில் இன்று இடைத்தேர்தல்

உத்தரப்பிரதேசம், ஜார்க்கண்ட், திரிபுரா, உத்தராகண்ட், கேரளா, மேற்கு வங்கம் ஆகிய 6 மாநிலங்களில் 7 சட்டப்பேரவை தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் வாக்குப்பதிவு இன்று காலை 7 மணியளவில் பலத்த பாதுகாப்புடன் இடம்பெற்றது.

ஜார்க்கண்ட் மாநிலத்தின் தும்ரி, திரிபுரா மாநிலத்தின் போக்ஸாநகர் மற்றும் தான்பூர் தொகுதிகள், உத்தரப்பிரதேசத்தில் கோஷி, உத்தராகண்ட் மாநிலத்தில் பாகேஸ்வர், கேரளாவில் புதுப்பள்ளி மற்றும் மேற்குவங்கத்தில் துக்புரி ஆகிய தொகுதிகளில் இடைத்தேர்தல் தொடங்கி நடைபெற்று வருகிறது.

இந்த இடைத்தேர்தல் அண்மையில் உருவான எதிர்க்கட்சிகளின் இண்டியா கூட்டணிக்கும் பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கும் முதல் நேரடி சவாலாகப் பார்க்கப்படுகிறது. இன்று பதிவாகும் வாக்குகள் செப்டம்பர் 8 ஆம் திகதி எண்ணப்படும்.

கடந்த 2021 ஆம் ஆண்டு தேர்தலில் துர்காபுரியை பா.ஜ.க. கைப்பற்றியது. அந்த தொகுதி சட்டமன்ற பிசுபடா ரே மறைந்ததையடுத்து அங்கு இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

இங்கே பா.ஜ.க, திரிணமூல் மற்றும்



காங்கிரஸ் – இடதுசாரி கூட்டணி இடையே மும்முனைப் போட்டி நிலவுகிறது.

திரிபுராவின் தன்பூர், போக்ஸாநகர் தொகுதிகளில் மார்க்சிஸ்ட் கொம்யூனிஸ்ட் மற்றும் ஆளும் பா.ஜ.க. இடையே நேரடிப் போட்டி நிலவுகிறது. இங்கே காங்கிரஸ், திப்ரா மோத்தா கட்சிகள் போட்டியிடவில்லை.

இந்த தேர்தலில் சிபிஎம் கட்சிக்கு வாய்ப்புகள் அதிகம் என கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன.

உத்தராகண்ட் மாநிலம் பாகேஸ்வர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்த பா.ஜ.கவின் சந்தன் ராம் தாஸ் கடந்த ஏப்ரல் மாதம் இறந்தார். அதனால் அங்கு இடைத்தேர்தல் நடைபெறுகிறது. இங்கே காங்கிரஸ் நேரடியாக மோதுகிறது.

இருப்பினும் பாகேஸ்வரில் கடந்த முறை பா.ஜ.க. வேட்பாளர் 12 ஆயிரம் வாக்குகளுக்கும் அதிகமான வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இதனால் இம்முறையும் அங்கே பா.ஜ.கவுக்கு வாய்ப்புகள் பிரகாசமாக இருப்பதாகத் தெரிகிறது. அதுமட்டுமல்லாமல் இந்த தொகுதியில் பா.ஜ.க. மறைந்த சந்தன் தாஸின் மனைவி பார்வதி தாஸையே களமிறக்கியுள்ளது.

தும்ரி சட்டப்பேரவைத் தொகுதியில் கேபினட் அமைச்சர் ஜகநாத் மஹதோ மறைவால் இடைத்தேர்தல் நடைபெறுகிறது. இங்கு என்.டி.ஏ. ஏஜேஎஸ்யு கட்சியின் யசோதா தேவியையும், இண்டிய கூட்டணி மறைந்த மஹதோவின் மனைவி பீ.பி. தேவியையும் களமிறக்கியுள்ளது.

கேரள முன்னாள் முதல்வரும் காங்கிரஸ் மூத்த தலைவருமான ஒமன் சாண்டியின் மறைவால் புதுப்பள்ளியில் இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

உத்தரப்பிரதேசத்தின் கோஷி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்த சமாஜ்வாடி கட்சியின் தாரா சிங் சவுஹான் கட்சியிலிருந்து விலகி பா.ஜ.கவில் இணைந்தார்.

இதனால் அங்கு இடைத்தேர்தல் நடைபெறு கிறது. பா.ஜ.கவில் இணைந்த அவர் அதே தொகுதியில் பா.ஜ.க. சார்பில் போட்டியி டுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சனாதனம் குறித்து பேசியதில் தவறில்லை: திரும்ப திரும்ப பேசுவேன் என்கிறார் உதயநிதி

சனாதனம் குறித்து நான் பேசியதில் தவறில்லை. பேசக் கூடாது என்றால் திரும்ப திரும்ப பேசுவேன் என அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி விமான நிலையத்தில் ஊடகவியலாளர்களிடம் பேசிய அவர், சனாதனம் குறித்து நான் பேசியதில் தவறில்லை. நான் பேசியதில் தவறு இல்லாதபோது, எதற்கு பதவியை ராஜினாமா செய்ய வேண்டும்? சனாதனத்தில் பெண்கள் அடிமையாக வைக்கப்பட்டிருந்தனர்.

கணவன் இறந்தால் உடன்கட்டை ஏற வேண்டும், வீட்டைவிட்டு வெளியே வரக்கூடாது என பல்வேறு கட்டுப்பாடுகள் இருந்தன. திராவிட மாடலால் அதில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

காலை உணவு திட்டம், பெண்களுக்கான புதுமைப்பெண் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை திராவிட மாதிரி ஆட்சி கொண்டு வந்துள்ளது. அனைத்து



மதங்கள் குறித்தும் பேசினேன். இந்து மதம் குறித்து மட்டும் பேசவில்லை. நான் பேசக் கூடாது என்றால் திரும்ப திரும்ப பேசுவேன் என்று தெரிவித்துள்ளார்.

## ஒன்லைன் மூலம் உணவுப் பொருள் விற்பனைக்கு தடை!

டில்லியில் எதிர்வரும் 9 ஆம் திகதி ஜி20 மாநாடு நடைபெறவுள்ள நிலையில் பாதுகாப்பு காரணங்களுக்காக ஒன்லைன் மூலம் உணவுப் பொருட்களை விநியோகிப்பதற்கு பொலிஸார் தடை விதித்துள்ளனர்.

இதுகுறித்து பொலிஸ் சிறப்பு ஆணையர் எஸ்.எஸ்.யாதவ், கருத்துத் தெரிவிக்கையில், டில்லி முழுவதும் தபால் மற்றும் மருத்துவ சேவைகள் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகள், நோயியல் ஆய்வகங்களின் மாதிரி சேகரிப்புகள் தொடர்ந்து செயல்படும்.

மாநாடு இடம்பெறும் நாட்களில் மருந்துகள் தவிர ஒன்லைன் விற்பனை சேவைகள் நிறுத்தப்படும் என்றும் பாதுகாப்புக் காரணங்களுக்காக இதுபோன்ற நடவடிக்கைகள் அவசியம் எனவும் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்க ஜனாதிபதியை வரவேற்க தயாராகும் டில்லி விமான நிலையம்

ஜி20 உச்சி மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் பங்கேற்கவுள்ளதைத் தொடர்ந்து அவரது ஏர் போர்ஸ் ஒன் விமானத்தை வரவேற்க டெல்லி பாலம் விமான நிலையம் தயாராகி வருகிறது. உச்சி மாநாட்டில் பங்கேற்க அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உட்பட 70 இற்கும் மேற்பட்ட பிரபலங்கள் இந்தியாவுக்கு செல்லவுள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதிகளால் பயன்படுத்தும் ஏர் போர்ஸ் ஒன் விமானம் உள்ளிட்ட பல பிரபலங்களின் விமானங்களை வரவேற்க விமான நிலையத்தின் தொழில் நுட்ப அதிகாரிகள் தயாராக உள்ளனர் கப்பட்டுள்ளது.

# வட கொரிய ஜனாதிபதி ரஷ்யாவுக்கு விஜயம்!



வட கொரிய ஜனாதிபதி கிம் ஜொங் உன் இந்த மாதம் ரஷ்யாவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதம்போது, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை சந்தித்து, உக்ரைனுக்கு எதிரான போருக்கான ஆயுதங்களை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து விவாதிப்பதற்கு அவர் திட்டமிட்டுள்ளார் என நிவ்யோர்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்காக வடகொரிய ஜனாதிபதி கிம் பியோங்யாங்கில் இருந்து கவச ரயிலில் ரஷ்யாவுக்கு பயணம் செய்வார் என தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும், சந்திப்பு இடம்பெறும் இடம் தொடர்பில் இதுவரை எவ்வித தகவல்களும் வெளியாகவில்லை.

உக்ரைனுக்கு எதிரான போருக்காக ரஷ்யாவுக்கு அதிகளவில் ஆயுதங்களை வழங்க வடகொரியா தயாராகி வருகிறது என அண்மையில் வெள்ளை மாளிகை தகவல் வெளியிட்டிருந்தது.

இதனையடுத்து குறித்த இரண்டு நாடுகளினதும் தலைவர்களின் சந்திப்பு தொடர்பான விபரங்கள் வெளியாகியுள்ளன. உக்ரைன் – ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு இடையே போர் தொடர்ந்து நீடித்துவரும் நிலையில் வட கொரியா அதிக ஆயுதங்களை வழங்கக்கூடும் என்று அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானில் உலங்கு வானூர்தி விபத்தில் மூவர் உயிரிழப்பு!





பாகிஸ்தானிய பலோச்சிஸ்ரான் மாகாணத்தில் நேற்று இடம்பெற்ற உலங்கு வானூர்தி விபத்தில் இரண்டு உயர்மட்ட கடற்படை அதிகாரிகள் உட்பட மூவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளனர் என அரச பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

வழமையானபயிற்சிநடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த போதே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

இவர்கள் பயணித்த உலங்கு வானூர்தியில் ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

பாகிஸ்தானிய பிரதமர் அன்வாருல் ஹக்கா இந்த விபத்து குறித்து, கவலை வெளியிட்டுள்ளார்.

அதேவேளை. கடந்த செப்டம்பர் மாதம் இடம்பெற்ற மற்றொரு இராணுவ உலங்கு வானூர்தி விபத்தின் போது, 6 உயர் இராணுவ அதிகாரிகள் குறித்த மாகாணத்தில் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜில் பைடனுக்கு கொரோனா தொற்று!



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் மனைவியான ஜில் பைடனுக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது என வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

இதனையடுத்து அவர் டெலாவேரில் உள்ள இல்லத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் ஜில் பைடனுக்கு கொரோனா தொற்று உறுதியானதை தொடர்ந்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கு கொரோனா சோதனை நடத்தப்பட்டுள்ளது.

ஆனால் அவருக்கு கொரோனா பாதிப்பு இல்லை என தகவல் வெளியாகியுள்ளது.

# பிரித்தானியாவில் வைத்தியர்களுக்கு சம்பள உயர்வு!

பிரித்தானியாவில் ஒன்றரை இலட்சம் வைத்தியர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவதற்கு அந்த நாட்டு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த நிலையில் தற்போது முதலாம் ஆண்டு பயிற்சி வைத்தியர்ளுக்கு 10.3 சதவீதமும், இளநிலை வைத்தியர்களுக்கு 8.8 சதவீதமும் வழங்கப்படவுள்ளது.

மருத்துவ ஆலோசகர்களுக்கு 6 சதவீதமும் சம்பள உயர்வு வழங்கப்படும் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.





# கல்முனையில் உளநல ஆலோசனை சேவைகள் விஸ்தரிப்புச் செய்யப்பட்டன

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை பிராந்திய சுகாதார பிரிவிலுள்ள கல்முனை ஆதார வைத்தியசாலையில் உளநல ஆலோசனை மையத்தின் சேவைகள் 1926 என்ற தொலைபேசி எண்ணினூடாக விஸ்திரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு கல்முனை ஆதார வைத்திய சாலையின் பணிப்பாளர் டாக்டர் இரா முரளீஸ்வரனின் தலைமையில் சனிக் கிழமை மாலை வைத்திய சாலையில் நடைபெற்றது.

1926 என்ற இலக்கத்தோடு தொடர்பு கொள்ளும் பொழுது தேவையான உளநல ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளலாம் என்று ஆதரவைத்திய சாலை வைத்தியசகர் தெரிவித்தார் .

வைத்திய சாலையின் கல்வி பிரிவுக்கு பொறுப்பான சிரேஸ்ட தாதிய உத்தியோகத்தர் எஸ்.அழகரெத்தினம் ஆரம்ப அறிமுக உரை நிகழ்த்தினார்.

1926 என்ற இலக்கத்தை சமூகத்தின் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கில் இது இடம்பெற்றது.

கல்முனை ஆதாரவைத்திசாலையின் உளநல வைத்திய நிபுணர் டாக்டர் ஏ.ஜி.எம். ஜுறைச், சிரேஸ்ட உளநல மருத்துவ அதிகாரி டாக்டர் யூ.எல். சராப்டீன் உளநலமருத்துவர் டாக்டர் எம்.ஏ.அனீஸ் அகமட், மருத்துவ அதிகாரி டாக்டர் பி.தாசிஸ் ஆகியோரும் உளநல பிரிவு தாதி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டார்கள்.

அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டதாவது-

1926 என்ற இலக்கத்தோடு தொடர்பு கொள்ளும் அத்தனை விடயங்களும் ரகசியமாக பேணப்படும். பரீட்சை தோல்வி, குடும்ப உறவு தொடர்பான பிரச்சினை, போதை வஸ்து பிரச்சினை, உளநோய் பிரச்சனை, அனைத்து விதமான உள சம்பந்தமான பிரச்சினைகள் ஆகியவற்றுக்கு இந்த இலக்கத்துடன் தொடர்பு கொள்ளும் போது உரிய ஆலோசனைகளையும் தீர்வுகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

அண்மைக் காலத்தில் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களிடையே தற்கொலைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. தற்பொழுது பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. தோல்வி அடைந்த மாணவர்கள் உளநல ஆலோசனை தேவைப்பட்டால் இந்த இலக்கத்தோடு தொடர்பு கொண்டு தங்களுக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ளலாம்.

இதனை ஆசிரியர்கள் பெற்றோர்களும் அறிந்து அவர்களுக்கு உதவ வேண்டும்.- என்று தெரிவிக்கப்பட்டது.

# கல்முனையில் மாணவர்களுக்கு மருத்துவ பரிசோதனைகள்

(அபு ஷைரீன்)

கல்முனை அல்-பஹ்றியா தேசியப் பாடசாலை மாணவர்களுக்கான மருத்துவ பரிசோதனையும், தடுப்பூசி ஏற்றும் நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றன.



இவ் வேலைத்திட்டத்தில் முதற்கட்டமாக 01,02,04 மற்றும் 10 ஆம் தர மாணவர்கள் உட்படுத்தப்பட்டனர். மாணவர்களின் சுகாதார நடவடிக்கைகளில் அதீத கவனம் செலுத்துவதன் மூலம் அவர்களை நோய்த்தாக்கங்களிலிருந்து பாதுகாக்க முடியும் என பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம்.பைசால் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தாய்,சேய் நல பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் றிஸ்வின், கல்முனை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஆர்.எம்.அஸ்மி, பல் வைத்திய அதிகாரி டாக்டர் சுர்பா, சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எம்.பாரூக், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஏ.ஜுனைதீன் உள்ளிட்ட மருத்துவகுழுவினரால் மாணவர்களுக்கு பரிசோதனை மற்றும் சிகிச்சைகளுடன் கூடிய வைத்திய ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.